ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1944/42 - 2015 දෙසැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.12.10

*1944/42 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின்**
***16 (2ஈ) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்***

*உத்தேச 136 அலகுகளைக் கொண்ட தொடர் மாடி வீட்டுத் தொகுதி - காலி ரன்தொம்பே வடக்கு, பலபிட்டி*

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 07, கிங்சி வீதி, இல. 100 என்ற முகவரியைக் கொண்ட திரு. விஜித் விஜேசிங்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட "உத்தேச 136 அலகுகளைக் கொண்ட தொடர் மாடி வீட்டுத் தொகுதி செயற்றிட்டம்" சம்பந்தமாக மேலதிக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2015.12.10 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் பரிசீலனை செய்ய முடியாது).*

1. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, இல. 500, டி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு - 10
2. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு - 10
3. மத்திய சுற்றாடல் அதிகார சபை, "பரிசர பியச", இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
4. நகர அபிவிருத்தி அதிகார சபை - 6 மற்றும் 7 ஆவது மாடி, "செத்சிரிபாய", பத்தரமுல்ல
5. மாவட்ட செயலகம் - காலி
6. பிரதேச செயலகம் - பலபிட்டிய
7. பிரதேச சபை - பலபிட்டிய
8. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் - மாவட்ட அலுவலகம், காலி
9. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்- பிரதேச அலுவலகம், இல. 274, பீலகொட, உணவட்டுண, காலி

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த உத்தேச கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2015.12.10 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்குமாறு அறியத் தருகிறேன்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.

தொலைபேசி இல. : 011- 2449754, 011- 2387922, 011- 2449197
தொலைநகல் இல. : 011- 2438005, 011-2472623.

12- 851